தினகரன்
# பொள்ளாச்சி

| இந்நாள் |
| --- |
| குரோதி வருடம் ஐப்பசி மாதம் 21-ம் நாள். வியாழக்கிழமை. வளர்பிறை. |
| திதி: சஷ்டி இரவு 12.35 மணி வரை; அதன் பிறகு சப்தமி. |
| நட்சத்திரம்: பூராடம் பகல் 11.47 மணி வரை; அதன் பிறகு உத்திராடம். |
| யோகம்: சித்த யோகம். |
| நல்ல நேரம்: காலை 10.45 - 11.45 மணி வரை. |
| ராகு காலம்: மதியம் 1.30 - 3.00 மணி வரை. |
| எமகண்டம்: காலை 6.00 - 7.30 மணி வரை. |
| சந்திராஷ்டமம்: மிருகசீருஷம். |
| சூலம்: தெற்கு; பரிகாரம்: தைலம். |

**வானிலை**

| இன்று | | நாளை | |
| --- | --- | --- | --- |
| அதிகபட்சம் | குறைந்தபட்சம் | அதிகபட்சம் | குறைந்தபட்சம் |
| 33.0 C / 91.4 F | 26.0 C / 78.8 F | 33.0 C / 91.4 F | 26.0 C / 78.8 F |

இன்று லேசான மழை பெய்யும்.

ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் ஆலோசனை பக்கம் 15

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க சொத்து ஜப்தி பக்கம் 16

## குளங்களில் தீவு திடலை முடக்கிய முட்புதர்கள்

**கோவை, நவ.7:** கோவை உக்கடம் பெரியகுளத்தில் ரோசி பெலிக்கன், சாரஸ் கிரே, ஓபன் பில்டு பெலிக்கன், மீடியன் எக்ரட், கேட்டல் எக்ரட், லார்ட் கார்மோரண்ட், நைட் ஹீரோயின், பர்பிள் ஹீரோயின், ஸ்பூன் பில், ஐ பிஸ், ஸ்பாட் பில்டு டக் உள்ளிட்ட 30க்கும் வகையான நீர் பறவைகள் வசித்து வந்தன. இந்த பறவைகள், குளங்களில் மரங்களில் கூடு கட்டி முட்டையிட்டு குஞ்சு பொரித்து தங்கியிருந்தன. உக்கடம் பெரிய குளத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் 32 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடந்தது. வாலாங்குளத்தில் 27 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடத்தப்பட்டது. குளக்கரையில் மண் சமன் செய்து அதில் கான்கிரீட் தளம், வடிகால் உருவாக்கப்பட்டது.பறவைகள் வசிக்க குளங்களின் மையத்தில் தீவு திடல் என்ற மண் மேடு உருவாக்கப்பட்டது. இதில் பல வகை மரக்கன்றுகள் நடப்பட்டது. ஆனால் மரக்கன்றுகள் வளராமல் முட்புதர்கள் மட்டுமே வளர்ந்து கிடக்கிறது. இந்த தீவு திடல் பறவைகள், நீர் வாத்துக்கள் வாழ இருப்பிடமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வாத்துக்கள், கொக்கு இனங்களில் இந்த தீவு திடல் புதரில் வாழ போதுமான வழி வகை இல்லாத சூழல் ஏற்பட்டிருக்கிறது. சில வகை பறவைகள் குளக்கரையில் தான் வசிக்கின்றன. தீவு திடலை மேம்படுத்தி நீர் வாழ் பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும் என சூழல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### தண்ணீர் மாசுபடுவதை தவிர்க்க
## பிஏபி கால்வாய்களில் நார் கழிவு கொட்டுவதை தடுக்க வேண்டும்



பொள்ளாச்சி சப்.கலெக்டர் அலுவலகத்தில் நேற்று, விவசாயிகள் முறையீட்டு கூட்டம், சப்.கலெக்டர் கேத்தரின் சரண்யா தலைமையில் நடைபெற்றது.

**குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**

**பொள்ளாச்சி,நவ.7:** பொள்ளாச்சி சப்.கலெக்டர் அலுவலகத்தில நேற்று, விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. சப்.கலெக்டர் கேத்தரின் சரண்யா தலைமை தாங்கினார்.பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்றனர். இதில்,விவசாயிகள் பலர் தங்கள் கோரிக்கைகளை மனுவாக எழுதி கொடுத்துடன்,அதுகுறித்து சம்பந்தபட்ட துறை அதிகாரிகளிடம் எடுத்துரைத்தனர்.

கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் கூறுகையில், 'ஆழியார் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் கால்வாய் வழியாக விளை நிலங்களுக்கு செல்கிறது. ஆனால், பிஏபி கால்வாய் பகுதியில் தென்னை நார் கழிவுகளை கொட்டி செல்வதால், தண்ணீர் திறப்பின் போது விவசாய நிலங்களுக்கு செல்லும் தண்ணீர் நச்சு தன்மையாகும் நிலை ஏற்பட்டும். அதிலும், புதிய ஆயக்கட்டு பாசத்திற்குட்பட்ட வேட்டைக்காரன்புதூர், பொள்ளாச்சி கால்வாய்களில் தென்னை நார் கழிவுகள் கொட்டி செல்வது அதிகரித்துள்ளது. எனவே, பிஏபி கால்வாயில் நார் கழிவுகளை கொட்டிச் செல்வதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். விதிமீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.தேவம்பாடி வலசில் உள்ள குளமானது, சில ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் நிரம்பியுள்ளது. ஆனால், அந்த குளத்தின் கரையோரம் சேதமடைந்த நிலையில் உள்ளது.எனவே, வருங்காலங்களில் குளம் உடைப்பு ஏற்படாமல் இருக்க, கரையை சீர்படுத்தி பலப்படுத்த வேண்டும். பிஏபி திட்ட கால்வாய் வழியாக,கடைமடை வரையிலும் தண்ணீர் விரைந்து செல்ல,தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.நோயால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை கணக்கிட்டு,அதற்கு வழங்க வேண்டிய நிவாரண தொகையை,உரிய விவசாயிகளுக்கு விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கேரள வாடல்நோயால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கும் உரிய நிவாரணம் வழங்க வேண்டும். 100 நாள் வேலையுறுதி திட்ட பணியாளர்களை தற்போது தொடர்ந்துள்ள மழையால் விவசாய நிலங்களில் பணி மேற்கொள்ள அனுமதி அளிக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

## அழுகிய நிலையில் டிரைவர் சடலம்

**கோவை நவ.7:** கோவை ரத்தினபுரி முதலாவது கிராஸ் வீதியை சேர்ந்தவர் ரமேஷ் (46). ஆட்டோ டிரைவர். இவர் மது போதை பழக்கத்திற்கு அடிமையாக இருந்துள்ளார். இவர் தனது வீட்டில் யாரும் இல்லாத போது பேனில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது தொடர்பாக காட்டூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். ரமேஷ் சில மாதங்களுக்கு முன் மனைவியுடன் வாக்குவாதம் செய்து தனியாக பிரிந்து தனி வீட்டில் வசித்து வந்துள்ளதாக தெரிகிறது. கடந்த 2ம் தேதியிலிருந்து இவர் வீட்டில் இருந்து வெளியே வரவில்லை. வீட்டில் துர்நாற்றம் வீசியதால் சந்தேகம் அடைந்த அக்கம் பக்கத்தினர் அங்கே சென்று பார்த்தபோது ரமேஷ் தூக்கு போட்டு தற்கொலை செய்த விவரம் தெரிய வந்தது. இறந்து மூன்று நாட்களுக்கு மேல் ஆனதால் சடலம் அழுகிப்போய் துர்நாற்றம் வீசி உள்ளது. மனைவி பிரிந்த பின்னர் ரமேஷ் விரக்தியாக இருக்கிறது. தற்கொலை செய்ய போகிறேன் என அடிக்கடி கூறி வந்துள்ளதாக தெரிகிறது. ஆனால் யாரும் இதை கண்டுகொள்ளவில்லை. இந்த நிலையில் ரமேஷ் தற்கொலை செய்து கொண்டதாக தெரிகிறது.

### வடகிழக்கு பருவமழையால்
## பிஏபி திட்ட அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது

**விவசாயிகள் மகிழ்ச்சி**



பொள்ளாச்சியை அடுத்து அமைந்துள்ள ஆழியார் அணை முழு கொள்ளளவை எட்டி கடல் போல காட்சி அளிக்கிறது.

**பொள்ளாச்சி, நவ.7:** பொள்ளாச்சியை அடுத்த பிஏபி அணைகளுக்கு வடகிழக்கு பருவமழையால் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் கடந்த ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலும் தென்மேற்கு பருவமழை அடிக்கடி பெய்தது. இதனால், பிஏபி திட்டத்திற்குட்பட்ட அணைகளுக்கு நீர்வரத்து அதிகமானது. அதன்பின் செப்டம்பர் மாதத்தில் மழை குறைந்தது. இதனால் பிஏபி திட்டதில் உள்ள பரம்பிக்குளம், ஆழியார் அணைகளுக்கு நீர்வரத்து சற்று குறைய துவங்கியதுஇதில் பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணைக்கு, சில வாரத்திற்கு முன்பு அப்பகுதியில் மழை குறைவாக இருந்ததால்,அந்நேரத்தில் வினாடிக்கு அதிகபட்சமாக 350 கன அடி தண்ணீரே வந்து கொண்டிருந்தது. இருப்பினும், அணையில் தொடர்ந்து தண்ணீர் சேகரிப்பால், 120 அடி கொண்ட ஆழியார் அணைக்கு 118 அடிக்கும் மேலாக நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

இந்நிலையில் கடந்த வாரத்தில் பல நாட்களாக, மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியிலும் ஆழியார் மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களிலும் வடகிழக்கு பருவமழை தொடர்ந்திருந்தது.இந்த மழையால் நீரோடைகளில் இருந்து தண்ணீர் பெருக்கெடுத்து ஓட துவங்கியுள்ளது. மேலும் கவியருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால், அங்கு வழியும் தண்ணீர் ஆழியார் அணைக்கு வந்துகொண்டிருப்பது தொடர்கிறது.

கடந்த மாத இறுதியில், வினாடிக்கு சுமார் 300 கன அடி தண்ணீரே வந்து கொண்டிருந்தது. ஆனால் நேற்றைய நிலவரப்படி ஆழியார் அணைக்கு வினாடிக்கு 550 கன அடி நீர்வரத்து இருந்தது. இருப்பினும் அதே அளவு தண்ணீர் பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்கும், கேரள பகுதிக்கும் தொடர்ந்து திறக்கப்பட்டுள்ளது. ஆழியார் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர்,கேரள மாநிலம் நோக்கி விரைந்து செல்கிறது.

**மழைப்பொழிவு தொடர்ந்தால் அணைகளுக்கு இன்னும் தண்ணீர் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், இந்த ஆண்டில் பரம்பிக்குளம் மற்றும் ஆழியார் அணை நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்தவாறு உள்ளதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.**

அதுபோல், டாப்சிலிப் அருகே உள்ள மொத்தம் 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணைக்கு, நேற்றைய நிலவரபடி வினாடிக்கு 850 கன அடி நீர்வரத்து இருந்தது. தற்போது அணையின் நீர்மட்டம் 71.40அடியாக உள்ளது.மேலும், மழைப்பொழிவு தொடர்ந்ததால் அணைகளுக்கு இன்னும் தண்ணீர் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், இந்த ஆண்டில் பரம்பிக்குளம் மற்றும் ஆழியார் அணை நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்தவாறு உள்ளதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

பிஏபி திட்ட அணைகளுக்கு, வடகிழக்கு பருவமழை காரணமாக நீர்வரத்து அதிகரித்து, தெடர்ந்து முழு அடியையும் தொட்டபடி உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### பள்ளத்தை சீர் செய்யாததால்
## பொள்ளாச்சி உடுமலை ரோட்டில் அடிக்கடி விபத்தால் மக்கள் அச்சம்

**10 நாட்களில் 8 முறை விபத்து**



பொள்ளாச்சி உடுமலை ரோட்டில் ஏற்பட்டுள்ள பெரிய அளவு பள்ளங்களால் அடிக்கடி விபத்து நேரிடுகிறது.

**பொள்ளாச்சி, நவ.7:** பொள்ளாச்சி பகுதியில் இந்த ஆண்டில் தென்மேற்கு பருவமழை சில மாதமாக அவ்வப்போது பெய்தது. அதன் பின் கடந்த ஒரு மாதமாக வடகிழக்கு பருவமழை அடிக்கடி பெய்து வருகிறது. கன மழையால், நகர் மற்றும் கிராமங்களில் ஆங்காங்கே சாலைகளில் உள்ள ஜல்லிகற்கள் பெயர்ந்து வர ஆரம்பித்துள்ளது.பொள்ளாச்சி நகரிலிருந்து பிரிந்து செல்லும் நெடுஞ்சாலையில் ஜல்லி பெயர்ந்து பள்ளமாகியுள்ளது.

அதிலும் குறிப்பாக மரப்பேட்டையிலிருந்து துவங்கும் உடுமலை ரோடு நெடுஞ்சாலையில் ஆங்காங்கே ரோடு பெயர்ந்த நிலையில் உள்ளது.மரப்பேட்டையிலிருந்து ஊஞ்சவேலம்பட்டி வரையிலும் சுமார் 3 கி.மீ தூரத்தில் பல்வேறு இடங்களில் பெரிய அளவில் பள்ளம் ஏற்பட்டுள்ளதால், அடிக்கடி விபத்து உண்டாகிறது.

சில இடங்களில் பெரிய அளவில் ஏற்பட்டுள்ள பள்ளத்தால்,அந்த வழியாக இரவு நேரத்தில் செல்லும் வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கி கொள்கின்றனர்.அதிலும், இருசக்கர வாகன ஓட்டிகள் அதிகளவு விபத்தில் சிக்கி கொள்ளும் நிலை ஏற்படுகிறது.இந்த சாலையை சீர் செய்யாமல் விட்டதால், கடந்த 10 நாட்களில் 8 முறை விபத்து ஏற்பட்டுள்ளது.நேற்று முன்தினம் இரவில் ஏற்பட்ட விபத்தையடுத்து, அங்குள்ள பெரிய அளவிலான பள்ளம் முன்பு, தற்காலிகமாக டிவைடர் வைத்து மறைக்கப்பட்டுள்ளது.

ஆனால் சாலையை சீர் செய்வதற்கான முழுமையான நடவடிக்கை எடுக்காமல் விட்டதாக புகார் எழுந்துள்ளது. இந்நிலை தொடர்ந்தால், உடுமலை ரோட்டில் தொடர்ந்து விபத்துகள் அதிகரிக்க நேரிடும். எனவே, உடுமலை ரோட்டில் சேதமான பகுதியை விரைந்து தரத்துடன் சீர்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், உயிர் பலியை தடுக்க வேண்டும், என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### சூரசம்ஹாரத்தையொட்டி
## பொள்ளாச்சியில் இன்று போக்குவரத்து மாற்றம்

**போலீசார் தகவல்**

**பொள்ளாச்சி, நவ.7:** பொள்ளாச்சியில் இன்று மாலை, சூரசம்ஹார நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதையடுத்து அப்பகுதியில் போக்குவரத்து மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர்.

பொள்ளாச்சி கடை வீதியில் உள்ள சுப்பிரமணிய சாமி கோயிலில் இந்த ஆண்டு சூரசம்ஹார திருவிழா, கடந்த 2ம் தேதி, காப்புக் கட்டு நிகழ்ச்சியுடன் துவங்கியது. இதையொட்டி சுப்பிரமணியசாமி கேயிலில் தினமும் 4 கால அபிஷேக பூஜைகள் நடந்தது. இதில் முக்கிய நிகழ்வாக, இன்று (7ம் தேதி) மாலை சுமார் 4 மணியளவில் சூரசம்ஹார விழா நடக்கிறது. சூரசம்ஹாரத்தை முன்னிட்டு, சத்திரம் வீதி, தெப்பக்குளம் வீதி, கிழக்கு எஸ். எஸ். கோயில் வீதி, வெங்கட்ரமணன் வீதி வழியாக மீண்டும் தேர்நிலை பகுதியில் அடுத்தடுத்து சூரன் வதை நிகழ்ச்சி நடக்க உள்ளது. இதையடுத்து, மாலை நேரத்தில் அப்பகுதியில் போக்குவரத்து மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்த வழியாக வரும் வாகனங்களை மாற்றுப்பாதையில் திருப்பிவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், சூரசம்ஹாரத்தை பார்க்க நகர் மற்றும் கிராமங்களில் இருந்து பக்தர்கள் அதிகம் வருவார்கள் என்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

SUNDARAM HOME
— Sundaram Finance Group —

எங்களின் மலிவு விலை வீட்டுக் கடன் (Affordable Home Loans) மற்றும் சிறு தொழில் அடமானக் கடன்களுக்கான பிரத்யேக கிளை



பொள்ளாச்சியில் இன்று முதல் இனிய உதயம்!

கிளை முகவரி:
சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்,
எண். 38/2, G R டவர்,
இரண்டாவது தளம், நியூ ஸ்கீம் ரோடு,
பொள்ளாச்சி - 642 001.

- நியாயமான வட்டி
- வெளிப்படையான செயல்முறை
- விரைவான ஒப்புதல்
- இடரில்லா சுலபமான அணுகுமுறை
- தனித்தன்மை வாய்ந்த சேவை

வீட்டுக் கடன்களுக்கான எங்கள் பொள்ளாச்சி கிளை:
சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்,
எண். 38/2, G R டவர், முதல் தளம், நியூ ஸ்கீம் ரோடு,
பொள்ளாச்சி - 642 001.
போன்: 04259 223552 www.sundaramhome.in